# இயேசுவின் தொனி

## தீர்க்கதரிசன மாத இதழ்

மலர் : 01 நவம்பர்-2025 இதழ்:04





# ஆவியின் எழுதல்

சிறப்புச் செய்தி உள்ளே..

# ஆசிரியர் பக்கம்



இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற அக்டோபர் மாதம் 1ந் தேதி இராமநாத புர மாவட்டத்தின் எழுப்புதலுக்காக இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் சார்பாக கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதில் சுமார் 4000 பேருக்கும் அதிகமானோர் கலந்து கொண் டார்கள். கடைசிக்கால எழுப்புதலைக் குறித்தும், எழுப்புதலில் கர்த்தர் பயன்படுத்தும் பாத்திரங்க ளுக்கான தகுதிகளைக்குறித்தும் தேவன் வெளிப் படுத்தின காரியங்களை பகிர்ந்து கொள்ளும்படி கர்த்தர் நடத்தினார். எழுப்புதலுக்கு முன்பாக ஊற்றப்படும் நான்குவித கடைசிக் கால அபி ஷேகங்களில் கர்த்தர் அநேகரை நிரப்பினார். சகோ மோகன் சி. லாசரஸ் அவர்கள் மாவட்டத்தின் எழுப்புதலுக்காக, ஜனங்களின் விடுதலைக்காக சிறப்பு செய்தி வழங்கி ஜெபத்தில் நடத்தினார்கள்.

அன்று மதியம் திண்டுக்கல் மாவட்டம் செம் பட்டி பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுவி சேஷ ஜெப முகாமில் எழுப்புதலின் ஜீவன், உயிர் நாடி சுவிசேஷம் என்கிற தலைப்பில் செய்திக ளை வழங்கி, அதற்குரிய விசேஷித்த அபிஷே கத்தால் வரங்களால் நிரப்பப்படும்படி ஜெபங்களை நடத்தினபோது தேவன் பலமாய் கிரியை செய் தார். சென்ற மாதம் நாம் செய்த எல்லா ஊழியங் களையும் கர்த்தர் அபரிமிதமாக ஆசீர்வதித்தார்.

உங்களில் அநேகர் தீர்க்கதரிசனமாக கர்த்தர் உரைத்துச் சொன்ன வார்த்தைகளை வைத்து, தனியாக, குழு வாக கூடி உற்சாகமாகவும் பாரத்தோடும் ஜெபித்து வருகிறீர்கள். கர்த்தர் ஒரு தீர்க்கதரிசன ஜெப சேனை யை உருவாக்கிக் கொண்டு வருகிறார் என்பதை நீங்கள் எங்களோடு பகிர்ந்து கொள்ளும் காரியங் களின் மூலம் தெளிவாக காண முடிகிறது. அநேக ருக்கு இந்த மாத இதழ் மிகவும் பிரயோஜனமுள்ள தாக இருக்கிறதென்று கர்த்தருக்குள் விசுவா சிக்கிறேன். இன்னும் பலரின் கரங்களில் கிடைக் கும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இதிலுள்ள தீர்க்கதரிசன சிறப்பு கட்டுரைகளை யும், வேத தியானங்களையும் வாசித்து அறிகிற தன் மூலம் விசுவாசத்திலே வளரவும், கர்த்தருக் குள் பலப்படவும் கிறிஸ்துவுக்குள்ளாக நீங்கள் ஊன்றக் கட்டப்படவும் உதவும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நாட்கள் செல்ல செல்ல தேவ னோடு நமக்கிருக்கும் நெருக்கத்தை இன்னும் அதிகரித்துக் கொண்டே போக வேண்டும். அது ஒன்றுதான் பாதுகாப்பான வாழ்விற்கு வழி. கார ணம், ஜெபிக்கிற தேவ ஜனங்களை தீமைகளோ, சூழ்நிலைகளோ ஒருக்காலும் பாதிப்பதில்லை. கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.!

**கிறிஸ்துவின் பணியில்,**

**சகோ. வின்சென்ட் செல்வகுமார்**

**VOICE OF JESUS MINISTRIES**
**P.O.BOX : 23, RAMANATHAPURAM**
**623501 | TAMILNADU | S. INDIA**
**CONTACT : (+91) 9788 404 333**



# ஆவியின் ஏவுதல்

**தீர்க்கதரிசன செய்தி**

**சகோ. வின்சென்ட் செல்வகுமார்**

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளிடத்தில் இடைப்படுவதற்கு பல வழிகளைப் பயன்படுத்துகிறார். தரிசனங்கள் மூலமாகக் காரியங்களை வெளிப்படுத்துவது, சொப்பனங்கள் வழியாக வெளிப்படுத்துவது, தம்முடைய குரலின் வழியாக வெளிப்படுத்துவது, முகமுகமான காட்சிகள் வழியாக வெளிப்படுத்துவது என்று நிறைய வழிகளில் கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளிடத்தில் காரியங்களை வெளிப்படுத்துவதை வேதத்தில் வாசிக்கிறோம். அதில் முக்கியமானது தீர்க்கதரிசிகளின் ஆவியை ஏவி அதின் வழியாக அவர்களிடம் பேசுவது. இதை ஆவியின் ஏவுதல் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

> *தீர்க்கதரிசனமானது ஒருக்காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.* 2 பேதுரு 1:21

ஆவியில் ஏவப்படுவது என்றால், தேவன் தம்முடைய ஆவியினால் நம்முடைய இருதயத்தோடு பேசுவது. இதை நாம் எண்ணங்கள் வடிவத்திலேயே உணர்கிறோம். நமக்குள் எண்ணங்கள் வருகிறதைப் போலவேதான் காணப்படும். ஆனால், அது நம் சொந்த நினைவுகளிலிருந்து மாறுபட்டதாக இருக்கும்.

பொதுவாகவே, மனிதர்களுக்குள் தோன்றும் எண்ணங்களும், திட்டங்களும் முதலாவது அவர்களுடைய மனதில்தான் உண்டாகும். அது அவர்களுடைய சொந்த ஆவியினால் உண்டாகும் எண்ணங்களாக இருக்கும். அப்படி உண்டாகும் எண்ணங்களை அவர்கள் தங்கள் மனதில்தான் பெறுகிறார்கள். அதேபோலத்தான் மனிதர்களுடைய சொந்த ஆவியினிடத்திலிருந்து இல்லாமல், தேவன் தம்முடைய ஆவியிலிருந்து எண்ணங்களை நமக்குள் ஏற்படுத்துகிறார். இதையும் நாம் நம்முடைய மனதில்தான் பெறுகிறோம்.

அப்படியானால் நமக்குள் தோன்றுகிற எண்ணங்கள் நம்முடைய சொந்த ஆவியிலிருந்து வருகிறதா அல்லது கர்த்தருடைய ஆவியிலிருந்து வருகிறதா என்பதை எப்படிப் பிரித்து அறிந்துகொள்வது என்ற ஒரு சந்தேகம் நம்மிடத்தில் உண்டாகும். கொஞ்சம் நிதானித்துப் பார்த்தால் இரண்டிற்கும் வித்தியாசம் இருப்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

தேவனுடைய ஆவியிலிருந்து வரும் எண்ணங்கள் தேவனுக்கடுத்த காரியங்களை வலியுறுத்துகிறதாயும்,

தேவனுடைய சுபாவங்களுக்கு ஒத்ததாகவும் இருக்கும். அதில் தேவன் நமக்குத் தரும் கட்டளைகள், வெளிப்படுத்த விரும்பும் மறைபொருள்கள், தேவனுடைய திட்டங்கள், நம் தனிப்பட்ட வாழ்க்கைக்கு அவர் சொல்லும் ஆலோசனைகள், ஆறுதல்கள் கூட இருக்கும். ஆனால், இவைகள் கர்த்தருடைய வசனத்திற்கு ஒத்ததாகவும், தேவனுடைய தன்மைக்கு ஏற்றதாகவும் இருக்கும். கர்த்தருடைய வசனத்துக்கு முரண்பட்டு வருகிற எண்ணங்கள் தேவனிடத்திலிருந்து வருபவையல்ல. அதுபோல தேவனுடைய தன்மைக்கு முரண்பட்டு வருகிறவையும் தேவனிடத்திலிருந்து வருபவையல்ல. உதாரணத்துக்கு தேவன் பரிசுத்தர் என்றால் பரிசுத்தத்திற்குப் புறம்பான காரியங்கள் அவரிடத்திலிருந்து வராது.

நம் மாம்சீக ஆவியிலிருந்து தோன்றும் ஏவுதல்கள் மாம்சம் சார்ந்த காரியங்களாக இருக்கும். சொத்து சேர்க்கச் சொன்னார், விலையுயர்ந்த கார் பங்களா வாங்கச் சொன்னார் என்று தங்கள் சுயவிருப்பம் சார்ந்து தீர்க்கதரிசனங்களைக் கேட்டிருப்பீர்கள். இவையெல்லாம் நம் மாம்சத்திலிருந்து உண்டாகும் காரியங்கள். அவை மாம்சீகக் காரியங்களுக்குத்தான் முதலிடம் கொடுக்கும். அதில் மாம்சீகமான நம்முடைய சுய ஆசை, சுய இச்சைகள் சம்மந்தப்பட்ட காரியங்கள்தான் நிறைந்திருக்கும்.

> *மாம்சத்தில் பிறப்பது மாம்சமாயிருக்கும். ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.* யோவான் 3:6

இந்த வசனம் இந்த இடத்தில் மறுபிறப்பைப் பற்றிச் சொல்லியிருந்தாலும், மாம்சத்திலிருந்து பிறக்கிற எதுவுமே மாம்சத்துக்குரியதாகத்தான் இருக்கும் என்பதை நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

தீர்க்கதரிசிகளுக்கு மாத்திரமல்ல, ஆவியின் அபிஷேகம் பெற்ற தேவனுடைய பிள்ளைகள் எல்லாரிடத்திலுமே கர்த்தர் ஆவியின் ஏவுதல்கள் மூலமாக வழிநடத்தி வருகிறதைப் பார்க்க முடியும். பொதுவாக தேவனுடைய பிள்ளைகளிடத்தில் கர்த்தர் ஆவியின் ஏவுதலாகச் சொல்லும் காரியங்கள் அவர்களை வழிநடத்துவதற்காகச் சொல்லப்படுகிறதாகவே இருக்கும். ஆனால், அதுவே தீர்க்கதரிசிகளிடத்தில் கர்த்தர் ஏவுதல் வழியாகப் பேசும்போது, அவை அவர் ஜனங்களுக்குச் சொல்ல வேண்டிய காரியங்கள், திட்டங்கள், எச்சரிப்புகள் சம்மந்தமான காரியங்களாக இருக்கும். முந்தினது தனிநபர் வழிநடத்துதலுக்கானது. பிந்தினது தீர்க்கதரிசன ஊழியங்களுக்கானது.

கர்த்தர் பேசுவதற்காக மாத்திரமல்ல, இன்னும் பல காரியங்களுக்காக ஆவியின் ஏவுதலைத் தருகிறார். ஆவியின் ஏவுதலைப் புரிந்துகொள்ள ஆரம்பித்துவிட்டால் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை உங்களுக்கு எளிதாகிவிடும். ஒவ்வொரு விஷயத்திலும் கர்த்தருடைய வழிநடத்துதலைப் பெற்றுக்கொண்டு சீராக நடக்கவும் முடியும்.

### 01. ஜெபிக்க ஏவுதல் :

எளிதாக நாம் புரிந்துகொள்ளுகிற காரியம், கர்த்தர் ஜெபிக்க நம்மை ஏவுவதைப் பற்றியது. சிலர் ஜெபிப்பதற்கான நிரல்களைப் பட்டியலிட்டு வைத்திருப்பார்கள். முதலில் இரண்டு பாட்டு, அடுத்தது, ஒரு சிறிய வேதப்பகுதியை வாசிப்பது, அப்புறம் நம் தேசத்துக்காக ஜெபிப்பது, அதில் யாராவது தேசத்தின் தேவைகள் பற்றி அனுப்பி வைத்திருக்கும் ஜெபக்குறிப்புகளுக்காக ஜெபிப்பது, அல்லது செய்திகளில் கேள்விப்பட்ட காரியங்களுக்காக ஜெபிப்பது, அப்புறம் நம் சபைகளுக்காக ஜெபிப்பது, பிறகு நம்முடைய குடும்பத்தின் தேவைகளுக்காக ஜெபிப்பது என்று பட்டியலிட்டு ஒருமணி நேரம் ஜெபிப்பதற்கான திட்டம் வைத்து ஜெபிப்பார்கள். இதில் தவறு இல்லை. ஆனால், இது புதிதாக ஜெபிக்கப் பழகுகிறவர்களுக்கானது.

ஆனால், நீங்கள் வளரும்போது கர்த்தர் உங்களை ஜெபிக்க ஏவுகிற காரியங்களை விளங்கிக்கொண்டு அவைகளுக்காக ஜெபிக்கத் துவங்க வேண்டும். அதுதான் ஆரோக்கியமான ஜெபம். ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு பிரச்சனைகளுக்கு ஜெபிக்க வேண்டியிருக்கும். அவைகளை கர்த்தர்தான் உங்களுக்கு வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். இல்லாவிட்டால் பிரதானமாக ஜெபிக்கப்பட வேண்டிய காரியங்களை விட்டுவிட்டு, நாம் ஏற்கனவே தயாரித்து வைத்திருக்கும் காரியங்களுக்காக வழக்கத்தின்படியே ஜெபிக்க நேர்ந்துவிடும்.

கர்த்தர் அதிகமாக, அல்லது அவசரமாக ஜெபிக்கப்பட வேண்டிய காரியங்களுக்குத்தான் ஏவுதல்களை நமக்கு ஆவியில் தருகிறார். வேதத்தில் கூட, உபவாசித்து ஜெபிக்க வனாந்திரத்துக்குப் போகும்படி ஆவியானவர் இயேசுவை ஏவினதை வாசித்திருக்கிறோம்.

> *உடனே ஆவியானவர் அவரை வனாந்திரத்திற்குப் போகும்படி ஏவினார்.* மாற்கு 1:12

ஆவியானவர் ஜெபிக்க மாத்திரமல்ல, எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதையும் நம்முடைய ஆவியில் ஏவி வெளிப்படுத்துவார். அதாவது இந்தக் காரியத்திற்காக எத்தனை நாட்கள் ஜெபிக்க வேண்டும். உபவாசித்து ஜெபிக்க வேண்டுமா போன்ற காரியங்களையெல்லாம்

கூட நமக்கு ஆவியின் ஏவுதல் மூலமாகவே வெளிப் படுத்திவிடுவார். அப்படி ஆவியினால் ஏவுதல் பெற்றுச் செய்கிற ஜெபங்கள் விசேஷமானவை.

இயேசு எப்போதும் ஜெபிக்கிறவர்தான். தினமும் அதிகாலை இருட்டோடே எழுந்து ஜெபிப்பதை வழக்கமாக வைத்திருந்தார் (மாற்கு 1:35). ஆனாலும், அவர் ஆவியில் ஏவப்பட்டு ஜெபிக்கும்படி நடத்தப்பட்டார். வழக்கத்தின்படி ஜெபிப்பது வேறு: ஆவியானவரால் ஏவப்பட்டு ஜெபிப்பது வேறு. ஆவியானவர் ஏவினால் மாத்திரம் ஜெபித்தால் போதும் என்று நீங்கள் மற்ற சமயங்களில் சும்மா இருந்துவிடக் கூடாது. பிற சமயங்களில் நீங்கள் வழக்கத்தின்படி செய்கிற ஜெபங்களைச் செய்யவேண்டும். தானியேல் வழக்கத்தின்படி செய்கிற ஜெபத்தை தன் வாழ்க்கை முழுவதிலும் கடைப்பிடித்தார். சில முக்கியமான தருணங்களில் ஆவியானவர் ஏவினால், அந்தச் சமயத்தில் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து தேவன் ஏவுகிறபடியே ஜெபிக்க வேண்டும்.

இதுதவிர, உங்கள் ஒவ்வொரு ஜெபவேளைகளிலும் உங்கள் வழக்கமான ஜெபங்களுக்குப் பிறகு சற்றுக் காத்திருந்து, முக்கியமாக ஜெபிக்கப்பட வேண்டிய ஏதாவது காரியங்கள் குறித்து கர்த்தர் ஏவுதல் தருகிறாரா என்றும் பார்க்க வேண்டும். கொஞ்சம் அமைதியாக ஆவியானவருடைய பிரசன்னத்தில் காத்திருக்கும் சமயங்களில் நிச்சயமாக பேசுவார்.

### 02. ஊழியங்களுக்கு உதவும்படி ஏவுதல் :

கர்த்தர் ஒரு ஊழியரைக் கொண்டோ அல்லது ஒரு சபையைக் கொண்டோ தம்முடைய ஊழியத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கும்போது, அந்த ஊழியத்துக்கு உதவும்படிக்கு நம் மனங்களை ஏவுவார். யார் அதற்கு உதவிசெய்தால் தேவனுக்கு பிரியமாயிருக்குமோ அவர்களின் மனங்களைக் கர்த்தர் ஏவுகிறதைப்பற்றி வேதத்தில் பார்க்க முடியும்.

*அப்பொழுது எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்குப் போகும்படி யூதா பென்யமீன் வம்சங்களின் தலைவரும், ஆசாரியரும்,லேவியருமன்றி, எவர்கள் ஆவியை தேவன் ஏவினாரோ அவர் கள் எல்லாரும் எழும்பினார்கள்.*

*அவர்களைச் சுற்றிலும் குடியிருக்கிற யாவரும் மனஉற்சாகமாய்க் காணிக்கை கொடுத்ததுமன்றி, வெள்ளிப் பணிமுட்டுகளையும், பொன்னையும் மற்ற வஸ்துக்களையும், மிருக ஜீவன்களையும் உச்சிதமான பொருள்களையும் கொடுத்து, அவர்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்.* எஸ்றா 1:5-6

எஸ்றாவின் புத்தகத்தின் துவக்கதிலிருந்து வாசித்தால், கர்த்தர் முன்குறித்த சமயம் வந்தபோது, அப்போது ஆளுமை செய்து கொண்டிருந்த கோரேஸ் என்ற ராஜாவின் ஆவியைக் கர்த்தர் ஏவி, யூதரின் ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்ற விருப்பத்தைக் கொடுத்தார். இவ்வளவுக்கும் கோரேஸ் யூதரல்ல. கர்த்தருடைய ஆவி



நாளுக்குநாள் அவரைப் பலமாக ஏவினதினால், எருசலேம் தேவாலயத்தைக் கட்டலாம் என்று முடிவெடுத்து, அதற்கான அழைப்பைச் சொன்னபோது, கர்த்தரில் இஸ்ரவேலரில் அநேகருடைய ஆவியை ஏவி, கர்த்தருடைய இந்தக் காரியத்தில் உதவிசெய்யும்படிக்கு அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

கர்த்தர் அவர்கள் எவ்விதத்தில் உதவி செய்ய வேண்டும் என்று அவர்களுடைய ஆவியை ஏவினாரோ அவர்கள் அந்தந்த விதங்களில் உதவும்படிக்கு எழும்பினார்கள் என்று பார்க்கிறோம். ஒரு கூட்டத்தார் ஆலயத்தைக் கட்டவும், இன்னொரு கூட்டத்தார் தங்கள் காணிக்கைகளினால் அந்தப் பணியைத் தாங்கவும் ஏவப்பட்டார்கள்.

### 03. அன்பு, நற்கிரியை செய்யும்படி ஏவுதல் :

எபிரெயர் 10:24ல் இன்னொரு காரியமும் சொல்லப் பட்டிருப்பதைக் கவனியுங்கள். அன்பு செய்வதற்கும், நற்கிரியைகளைச் செய்வதற்கும் கூட கர்த்தர் நம்மை ஏவுகிறார். தேவையிலிருக்கிற சிலரைக் காணும்போதும்,

அன்பை எதிர்பார்த்துக் காத்திருக்கும் எளியவர்களைக் காணும்போது அவர்களை அன்புகூர்ந்து விசாரிக்கவும் கூட கர்த்தர் நம்மை ஏவுகிறார் என்கிறது வேதம். நம்மை அவர் ஏவுகிறபடியே நாம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதைக் கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

நற்கிரியைகளைச் செய்வதிலும், பிறரிடத்தில் அன்பு கூர்வதிலும் நாம் சில சமயங்களில் குறைவுபட்டுக் காணப்படலாம். அந்தச் சமயத்தில், பரலோகத்தில், நம்முடைய கணக்கில் அவை குறைவாகக் காணப்படும். அதனிமித்தமாகவே நமக்குள் கர்த்தர் தம் ஆவியின் ஏவுதலைத் தந்து நற்கிரியைகளைச் செய்யும்படிக்கு நம்மை நடத்தலாம். எதுவாயினும், கர்த்தர் ஆவியில் ஏவுகிற எல்லாக் காரியங்களுக்கும் கீழ்ப்படிவதுதான் உத்தமம். அது நமக்கு நிறைய ஆவிக்குரிய நன்மைகளையும், பாதுகாப்பையும் கொடுக்கும் என்பதில் எவ்வளவும் சந்தேகமில்லை.

கர்த்தருடைய ஆவியின் ஏவுதலை நாம் எல்லா விஷயங்களிலும் புரிந்துகொள்ள ஆரம்பித்தால், நாளடைவில் நாம் அதில் பழக்கப்பட்டு விடுவோம். அப்படிக் கர்த்தருடைய ஆவியின் ஏவுதலைப் புரிந்துகொள்ளுகிறவர்கள்தான் தங்களுடைய ஆவியில் கர்த்தர் பேசுவதை சுலபமாக விளங்கிக் கொள்வார்கள். பழைய ஏற்பாட்டுக் காலத்தின் தீர்க்கதரிசிகள் தரிசனம், ஆவிக்குரிய அனுபவங்களின் வழியாக தேவனுடைய வெளிப்பாடுகளைப் பெற்றாலும், அதிகபட்சமாக அவர்கள் தங்கள் ஆவியில் கர்த்தர் பேசுகிற அனுபவத்தின் வழியாகவே வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொண்டார்கள். இதைத்தான் 2 பேதுரு 1:21ல் வாசித்தோம்.

### எச்சரிக்கையாய் இருக்க வேண்டியவை :

ஆவியின் வழியாக வெளிப்பாடுகளைப் பெறுகிற அனுபவத்தில் நாம் சிலவற்றைக் குறித்து எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

### 1. நம் சொந்த ஆவி நம்மை ஏவுகிறதா என்பதை நிதானிக்க வேண்டும்.

கர்த்தருடைய ஆவியானவர் நம்மை ஏவி தீர்க்கதரிசனங்களை வெளிப்படுத்துவதைப் போலவே, சில சமயங்களில் நம்முடைய சொந்த ஆவியே நம்மை ஏவ ஆரம்பித்துவிடும். அதுவும் கர்த்தருடைய ஆவியைப் போலவே எண்ணங்கள் வழியாகவே கிரியை செய்கிறதினால் அதை பகுத்தறிவது கடினம். இதற்குச் சரியான தீர்வு ஆவியிலே வெளிப்படுத்தப்படும் காரியங்கள் கர்த்தருக்கடுத்த அடையாளங்களைக் கொண்டிருக்கிறதா, அல்லது நம் சொந்த மாம்சத்தின் விருப்பம், இச்சை ஆகியவற்றின் வெளிப்பாடாக வெளிப்படுகிறதா என்பதை ஆராய வேண்டும்.

சொந்த ஆவி ஏவிப் பேசும் காரியங்கள் எல்லாமே தீர்க்கதரிசனம் சொல்கிறவருடைய மாம்சீக விருப்பத்தின்படியேயும், இச்சையின்படியேயும் வெளிப்படும். அது அவர்களுக்கு தற்பொழிவைத் தேடிக்கொள்ள வைக்கிறதாயும், மனிதர்களிடத்தில் தங்களை உயர்த்திக் கொள்ளத்தக்கதாக வெளிப்படுகிறதாயும் இருக்கும். தங்கள் சொந்த ஆவியின் ஏவுதலைப் பின்பற்றுகிற தீர்க்கதரிசிகளைக் குறித்து கர்த்தர் வெளிப்படுத்திப் பேசியிருக்கிறதைக் கவனியுங்கள்.

> எசேக்கியேல் 13:2-6
> *மனுபுத்திரனே, தீர்க்கதரிசனம் சொல்லுகிற இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக நீ தீர்க்கதரிசனம் உரைத்து, தங்கள் இருதயத்தில் இருக்கிறதையே எடுத்துத் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவர்களோடே நீ சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.*
>
> *கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: தாங்கள் ஒன்றும் தரிசியாதிருந்தும், தங்களுடைய ஆவியின் ஏவுதலைப் பின்பற்றுகிற மதிகெட்ட தீர்க்கதரிசிகளுக்கு ஐயோ!*
>
> *கர்த்தர் தங்களை அனுப்பாதிருந்தும், கர்த்தர் உரைத்தாரென்று சொல்லி அவர்கள் அபத்தத்தையும், பொய்க்குறியையும் தரிசித்து, காரியத்தை நிர்வாகம் பண்ணலாமென்று நம்பிக்கையாயிருக்கிறார்கள்.*

இந்த வசனங்களில் தங்கள் சொந்தஆவியின் ஏவுதலினால் தீர்க்கதரிசனம் உரைக்கிறவர்களைப் பற்றியும், அவர்களுடைய அடையாளங்கள் பற்றியும், அவர்களுக்கு நேரிடுகிற நியாயத்தீர்ப்பு பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

அவர்கள் நரிகளைப் போலத் தந்திரமானவர்களாக இருப்பார்கள். அவர்கள் தேசத்திற்காகவோ, ஜனங்களுக்காகவோ பாரப்படுகிறவர்களாகவோ, அல்லது ஜெபிக்கிறவர்களாகவோ இருக்கமாட்டார்கள். அவர்

களுடைய நோக்கம் தங்களை உயர்த்திக்கொண்டு, தேசத்தின் காரியங்களை நிர்வாகம் பண்ணலாம் என்பது மாத்திரம்தான். இத்தகைய அடையாளமுள்ளவர்கள் சொல்லுகிற தீர்க்கதரிசனங்கள் நிச்சயமாக தேவனிடத்திலிருந்து வெளிப்பட்ட தீர்க்கதரிசனங்கள் அல்ல.

**2. சாத்தானுடைய ஏவுதலினாலும் தீர்க்கதரிசனங்கள் உண்டாகும்.**

இவைகளைக் கள்ளதீர்க்கதரிசனம் என்கிறோம். இவர்கள் சாத்தானுடைய ஆவியினால் ஏவப்பட்டு தீர்க்கதரிசனம் உரைப்பார்கள். இவர்களை அடையாளம் காண்பதும் வெகுசுலபம். இப்படி சாத்தானால் ஏவப்பட்டுச் சொல்லப்படும் காரியங்கள் எல்லாமே கர்த்தருடைய வார்த்தைக்கும், கர்த்தருடைய சுபாவத்துக்கும் நேரெதிரானதாக இருக்கும்.

சாத்தான் மனிதர்களுடைய இருதயங்களை ஏவ முடியும் என்பதை வேதம் பல இடங்களில் நமக்கு விளக்கிச் சொல்லுகிறது. கர்த்தரோடு இருந்த ஜனங்கள்கூட கொஞ்சம் பிசகும்போது, சாத்தான் அவர்களுடைய இருதயத்தை ஏவிவிடுகிற சம்பவங்களை வேதத்தில் காணமுடிகிறது. தாவீதின் இருதயத்தை சாத்தான் ஏவினதினால் அவர் இஸ்ரவேல், யூதா என்பவர்களுடைய தொகையை இலக்கம் பார்க்கச் சொல்லிக் கட்டளையிட்டார் என்று பார்க்கிறோம்.

> ***சாத்தான் இஸ்ரவேலருக்கு விரோதமாக எழும்பி, இஸ்ரவேலைத் தொகையிடுகிறதற்குத் தாவீதை ஏவிவிட்டது.*** 1நாளா 21:1

தன் ஆளுமைக்குட்பட்ட ஜனங்களைத் தொகையிடுவது என்ன பாவ காரியமா என்கிற கேள்வி நமக்கு வரும். ஆனால் உண்மையில் நடந்தது வேறு. தாவீது முழு இஸ்ரவேலுக்கும் ராஜாவாக இருந்தார். அவர் முழு இஸ்ரவேலையும் தொகையிடச் சொல்லியிருந்தால் அது பாவமாயிருந்திராது. ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. அவர் சொன்னதற்கு வேறொரு காரணமிருந்தது. வாசித்துப் பாருங்கள்.

> ***கர்த்தருடைய கோபம் திரும்ப இஸ்ரவேலின் மேல் மூண்டது: இஸ்ரவேல் யூதா என்பவர்களை இலக்கம் பார் என்று அவர்களுக்கு விரோதமாகச் சொல்லுகிறதற்கு தாவீது ஏவப்பட்டான்.*** 1 சாமு 24:1

தாவீது இஸ்ரவேல் முழுமைக்குமான ராஜாவாக இருந்தாலும், அவர் அடிப்படையில் யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர். அவர் இஸ்ரவேலின் பிற கோத்திரங்களையும், யூதா கோத்திரத்தை தனித்தனியாக தொகையிடச் சொன்னதின் காரணம் உங்களுக்குப் புரிந்திருக்கும். தன் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் எவ்வளவு பேர், பிறகோத்திரத்தார் எவ்வளவு பேர் என்று தெரிந்து வைத்துக்கொள்ள தாவீது நினைத்தார்.

தன் ஜாதியைச் சேர்ந்தவர்கள் குறைவாக இருந்தால் அவர்களுக்கு சலுகைகளை ஏற்படுத்தி அவர்களை பலப்படுத்தலாம். மற்ற இனங்களில் அதிகமாக அதிகாரங்களில் இருப்பவர்களைத் தாழ்த்தலாம். ஒட்டுமொத்தமாக ஒரு பிரிவினையை அவர் இஸ்ரவேல் கோத்திரங்களுக்குள்ளே ஏற்படுத்திவிட்டார். இதற்குக் காரணம், தாவீதை ஏவின ஒரு பிரிவினையின் ஆவியே. தாவீதின் பார்வையிலும், மனதிலும் தன் ஜனங்களிடத்திலேயே பாகுபாடு பார்க்கும் பிரிவினைக் குணம் வந்துவிட்டது.

காரியம் வெளிப்பார்வைக்கு நல்லதுதான். ஆனால் அதின் நோக்கம் தவறானது. நாளாகமப் புத்தகத்தில் பல இடங்களில் இராணுவத்தாரின் தொகையும், இன்னும் பிறதொகைகளும் சொல்லப்பட்டிருக்கிறது. அது தவறல்ல. அதைத் தவறான நோக்கத்திற்காக செய்யும்போதுதான் அது தவறாகிவிடுகிறது.

சாத்தான் ஏவிச் சொல்லும் காரியங்கள் எல்லாமே பிசாசுக்கடுத்த காரியங்களாகவே இருக்கும். இவ்விதமான ஏவுதல்கள் உண்டாகும்போது வெகு கவனமாக வெளிப்படுத்தப்படும் காரியங்களின் நோக்கத்தையும், தன்மையையும் அறிந்து செயல்பட வேண்டும்.

எல்லாவற்றிலும் நிதானமாகவும், கவனத்துடனும் செயல்பட்டால் தீர்க்கதரிசன ஊழியத்தில் இடறல்கள் வராது என்பது உறுதி.

> **ஆவிக்குள்ளாவது என்றால் பரிசுத்த ஆவியானவர் உணருகிறதை நாமும் உணரும்படிக்கும், அவர் சொல்லுவதை நாமும் புரிந்துகொள்ளும்படிக்கும் அவருடைய சாயல் நமக்குள் வரும். உதாரணமாக, இரும்பை எடுத்து நெருப்புக்குள் போட்டால் முதலில் அது நெருப்பு பிடிக்க பிடிக்க சூடாகும். பின்பு கொஞ்சம் நேரம் ஆக ஆக அந்த இரும்பு நெருப்பாகிவிடும். அதாவது, நெருப்பின் சாயல் அப்படியே அந்த இரும்புக்குள் வந்துவிடும். அதைப்போல, கர்த்தருடைய சாயல் நமக்குள் வந்தால்தான் அவருடைய ஆவியும் நம்முடைய ஆவியும் ஒன்றாக இணையும். அப்பொழுது, நாம் பார்க்கிற காட்சிகள், கேட்கிற காரியங்கள் எல்லாம் மிகத்தெளிவாக இருக்கும்.**

# ஊழிய அறிக்கை

# தீர்க்கதரிசன உபவாச ஜெபம்

## 11 அக்டோபர் 2025



இராமநாதபுரம் இயேசுவின் தொனி தீர்க்கதரிசன மையத்தில் அக்டோபர் 11ம் தேதி தீர்க்கதரிசன உபவாசக் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொள்ள தீர்க்கதரிசனத்தின் மேல் பாரமும், வாஞ்சையும் உள்ளவர்கள் அனுமதி பெற்று, முன்பதிவு செய்யப்பட்டு தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்தும், மாநிலங்களிலிருந்தும் வந்திருந்தார்கள். தேசங்களில் வரப்போகிற தீமைகளை அறிந்து, அதற்காக பாரப்பட்டு ஜெபிக்கவும், தேவனின் அடுத்த கட்ட நகர்வைப் புரிந்து கொள்ளவும் மிகுந்த வாஞ்சையாய் வந்திருந்தார்கள்.

காலை 9.30 மணியளவில் சகோ ஜேம்ஸ் சிவக்குமார் அவர்கள் ஆரம்ப ஜெபத்தை ஏறெக்க, சகோ பிரகாஷ், சகோ கிறிஸ்டோபர் இருவரும் இணைந்து முதல் பாடல் பகுதியை நடத்தினபோது, தேவ பிரசன்னத்தால் இடம் நிரம்பினது. அதைத் தொடர்ந்து, சகோ ஜேம்ஸ் ஸ்வர்ண ராஜ் அவர்கள் கடந்த மாதத்தில் கர்த்தர் பேசின எச்சரிக்கையானவை மற்றும் வரவிருக்கும் தீமைகள் கட்டப்பட வேண்டுமென்று ஜெபத்தை நடத்தினார்கள். ஜனங்கள் யாவரும் பொல்லாத ஆவிகளின் கிரியைகளுக்கு எதிராய் போராடி ஜெபித்தார்கள்.

முதல் செய்தி வேளையில், நமது மதிப்பிற்குரிய தீர்க்கதரிசி வின்செண்ட் செல்வகுமார் அவர்கள் பிலிப்பு தன்னை எப்படி தேவ சித்தத்திற்கென்று முழுமையாய் அர்ப்பணித்து ஊழியம் செய்தாரோ அதுபோல நாமும் இந்த கடைசி நாட்களில் தேவசித்தத்திற்கு முழுமையாய் அர்ப்பணிக்கும்படி விவரித்து சொன்னபோது ஜனங்களின் இருதயங்களில் அனல் மூண்டது. கடைசிக் காலத்தில் எழுப்புதலுக்கு முன்பாக ஊற்றப்படப் போகும் நான்கு பிரதானமான அபிஷேகங்களான ஜெப அபிஷேகம், தீர்க்கதரிசன அபிஷேகம், யுத்த அபிஷேகம் மற்றும் சுவிசேஷ அபிஷேகங்களைப்பற்றி விளக்கமாக சொல்லி ஜெபித்தபோது வந்திருந்த ஜனங்களை தேவன் தமது அபிஷேகத்தினால் அளவில்லாமல் நிறைத்தார்.

அதைத் தொடர்ந்து, சகோ ஜோனத்தான் மற்றும் சகோதரி ஏஞ்சலின் ஜோனத்தான் அவர்கள் வந்திருந்த ஜனங்களை ஆராதனைக்குள் வழிநடத்தினார்கள். கர்த்தரின் மகிமையின் பிரசன்னத்தையும், அசைவாடுதலையும் பலமாய் உணர முடிந்தது. தொடர்ந்து, நான்குவித அபிஷேகத்தைப் பெற்றவர்கள் யோவேல் 2:28ல் சொல்லப்பட்டபடி தீர்க்கதரிசன அபிஷேகத்தை பெற்றுக் கொள்ளும்போது அவர்களின் ஊழியம் தெளிவானதாய் அமையும். அதாவது, ஜெப அபிஷேகத்தைப் பெற்றவர்









கள் தீர்க்கதரிசன அபிஷேகத்தையும் பெற்றுக்கொண்டால் தீர்க்கதரிசன ஜெபவீரர்களாய் எதற்கு, எப்படி ஜெபிக்க வேண்டுமென்று முழுவிபரத்தையும் அறிந்து ஜெபிக்க முடியும் என்பதை விளக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

கடைசி ஜெப வேளையில் காத்திருந்த ஜனங்களை தமது பலத்த அபிஷேகத்தால் நிரப்பி, ஆவிக்குரிய கண்களையும், செவிகளையும் திறந்து தேசங்களில், மாவட்டங்களில், மாநிலங்களில் உலக அளவில் வரவிருக்கிற ஆபத்துகள் குறித்தும், மறைக்கப்பட்ட பல இரகசியங்கள் குறித்தும், தேவன் தமது இருதயத்தின் பாரத்தை வெளிப்படுத்தினார். கலந்துகொண்ட ஒவ்வொருவரையும் கர்த்தர் தம்முடைய மகிமையினால் நிரப்பி, வரங்களை அனல் மூட்டி எழுப்பி, அபிஷேகத்தினாலும் அடையாளங்களினாலும் நிரப்பினார். அனுதினமும் இந்தக் காரியங்களுக்காக ஜெபிக்கும் மனநிலையோடும் வைராக்கியத்தோடும் மனநிறைவோடு ஜனங்கள் கடந்து போனார்கள். கர்த்தருடைய நாமத்திற்கு மகிமையுண்டாவதாக.!











# ஆவிக்குரிய அனுபவங்கள்



ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு தேவ தரிசனங்களைக் காண்பது என்பது இப்போது விசுவாசிக்கிற யாவருக்கும் சாத்தியமானது. இந்தக் கடைசிக்காலத்தில் ஆவிக்குரிய அனுபவங்கள் விசுவாசிக்கிற எல்லாருடைய வாழ்விலும் ஏராளமாக நடக்க ஆரம்பித்திருக்கிறது. இதுவும் கடைசிக் கால அடையாளங்களில் ஒன்று.

**தீர்க்கதரிசன உபவாச ஜெபத்தில் கலந்துகொண்டவர்களின் ஆவிக்குரிய அனுபவங்களில் சில..!**

### 1 சகோதரி. மனோரஞ்சிதம் - சென்னை

அக்கினி அபிஷேகம் என்மேல் ஊற்றப்பட்டது. கர்த்தருடைய சாயலை, அவருடைய பாதத்தை, சிவப்பு நிற வஸ்திரத்தையும் பார்த்தேன். விளைநிலங்களில் கதிர்கள் சேதமாகியதையும், மக்கள் வேதனை அடைகிறதையும், விளைச்சல் பாதிக்கப்பட்டதாக கர்த்தரிடத்தில் மக்கள் கதறி அழுவதையும் பார்த்தேன்.

### 2 சகோதரி. ஆல்பர்ட் கவிதா - சென்னை

உலக நாடுகளில் இருக்கும் அநேக தலைவர்கள் ஒன்றாக கூடி எல்லையின் ஒரு கதவை திறக்கின்றனர். அதன் வழியாக 3 மனிதர்கள் கறுப்பு நிற உடையணிந்து, உடல் முழுவதும் மறைக்கப்பட்ட சாத்தான் சபை அங்கத்தினர்கள்போல இருந்தது. அதில் ஒருவர் கையில் கறுப்பு நிற சணல் முக்கோண வடிவத்தில் இருக்கிறது. ஒரு பானையில் இரத்தம். அந்த நுழைவாயில் வழியாக உள்ளே வருகிறார்கள். அப்போது தேசத்தில் அநேக மரணங்கள் ஏற்படப் போகிறதாக கர்த்தர் வெளிப்படுத்தினார். இந்திய தேசத்திற்கு விரோதமாக, தெய்வங்களாக வணங்கப்படுகிற ஏழு பெண் ஆவிகளை கர்த்தர் காண்பித்தார். அவை இரண்டு இரண்டாக பிரிந்து, தேசத்தின் நான்கு திசைகளுக்கும் கடந்து செல்கிறது. அநேக வாலிபர்களை தற்கொலைக்கு தூண்டவும், அசுத்தமான மோக இச்சைகளை தூண்டி பலரை இரத்தம் சிந்தப்பண்ணி மரிக்க வைப்பதாக கர்த்தர் வெளிப்படுத்தி, இந்த ஆவிகள் கட்டப்பட வேண்டும் என்று ஜெபிக்கும்படி உணர்த்தினார்.

### 3 சகோதரி. ஏஞ்சல் டெரிக் - நாகர்கோயில்

இன்று நான் ஒரு புதிதான அக்கினியின் தொடுதலை என் சரீரத்தில் உணர்ந்தேன். புதிய அந்நியபாஷையை, கர்த்தருடைய சத்தத்தை, புதிய வாசனையை நுகர்ந்தேன். சில தலைவர்கள் ஆட்டுத்தோலை போர்த்தியுள்ள ஓநாய்கள் போல இருக்கிறார்கள் என்றும், அவர்கள் கூட்டத்தை பட்சிப்பார்கள் என்றும் கர்த்தர் வெளிப்படுத்தினார். சில தீமையான இரத்த ஒப்பந்தங்கள் தேசங்களுக்கிடையே பரிமாறப்படுகிறது. அது அந்த நாடுகளின் மீது சாத்தானின் வல்லமையை வரவழைக்கும். சில நாடுகள் விதித்த இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக கடல் வழி வர்த்தகம் பாதிக்கப்பட்டது. சில பெரிய சபைகளின் பலிபீடங்கள் தீட்டுப்படுத்தப்பட்டு, போலியான அற்புதங்களை காட்டி, தங்களது மந்தையை நடத்தும்படி விழுந்துபோன தூதர்களை அழைத்திருக்கிறார்கள் என்று வெளிப்படுத்தப்பட்டது.

### 4 சகோதரி. ஜோஸ்லின் - சென்னை

வானத்தில் இருக்கும் செயற்கைக்கோள்களுக்காக

ஜெபிக்கும்படி கர்த்தர் ஏவினார். அதன் முழு கட்டுப்பாடும் சர்ப்பத்திடம் போகும். அது தன் வாலால் செயற்கைக்கோள்களை இழுத்து தன்னிடம் பிடித்து வைத்திருக்கிறது. தேசங்கள் மேல் இதன் மூலம் பெரிய தீமை கட்டுவிழ்க்கப்பட்டிருக்கிறது. பனிப்பாறைகள் நிறைந்த பனி பிரதேசம். அங்கே வெள்ளையும், சாம்பலும் கலந்த நிறமுள்ள ஒரு நரி நின்று பார்த்துக் கொண்டிருக்கிறது. பனிப்பிரதேச தேசங்களிலிருந்து ஒரு தந்திரம் புறப்பட்டு வருகிறது. இதற்காக ஜெபிக்க வேண்டும்.

### 5 சகோதரி. கவிதா - மதுரை

கிருமிகள் கடல் அலையில் திரளாக வந்து மோதுகிறது. அருவருப்பான மேல் தோலையுடைய பூச்சிகள் தமிழ்நாட்டுக்கு விரோதமாக அதிகளவில் அனுப்பப்படுகிறது. பாறை இடுக்குகளிலிருந்து இரத்தம் புரண்டு வருவதையும், குகைகளிலிருந்தும் ஆறுபோல வேகமாய் பாய்ந்து வருகிறது. நிலங்கள், தெருக்கள் ஊர்கள் எல்லாம் அதிகமாக வறண்டு இருக்கிறது. தேசத்தில் இரத்தம் சிந்துகிற பொல்லாத பெண் விக்கிரகத்தின் ஆவி சிவப்பு சேலை உடுத்தி கோபத்தோடு இருப்பதையும், இரத்தம் சிந்தப்பண்ணுகிற கறுப்பு நிற பெண் ஆவி வைராக்கியம் கொண்டு நிற்பதையும் பார்த்தேன். அரசியலை வைத்து இரத்த ஆறு ஓட கட்சிகளின் பின்னால் சாத்தான் நிற்கிறது. குப்பையில் கிடக்கும் அட்டை பெட்டிகளில் உணவு தேடி சண்டை போடுகிறார்கள். அது பஞ்சம் என்றும், மனிதர்களின் உடல்கள் அழுகி ஒழுகுவதையும் பார்த்தேன்.

### 6 சகோதரி. ராமலட்சுமி - சென்னை

திரளான ஜனங்கள் நிற்கிறார்கள். அநேக வாலிபர்களும் உண்டு. கடந்த நாட்களில் நடந்ததைப் பார்க்கிலும் இன்னும் அதிகமான இரத்தம் சிந்துதல் உண்டாகும். இதில் அரசியல் கலந்திருக்கும். முந்தி எழும்பவில்லை என்றால் சத்துருவானவன் முந்திக் கொள்வான் என்பதாக கர்த்தர் எச்சரித்து சொன்னார். அப்போது காட்டெருமையை பார்த்தேன். ஒரு பெரிய வண்டு பறந்து வருகிறது. அப்போது இரத்தம் சிந்தப்பண்ணி மரணம் உண்டாகிறது. ஒரு குரங்கின் ஆவியை இங்கும் அங்கும் பறந்து கொண்டிருக்கிறது. நான் உயரமான இடத்தில் நின்று அதை பார்க்கும்போது, காற்று வேகமாக வீசுகிறது. அநேக இடங்களில் நெருப்பினால் அழிவுகள் உண்டாகும், உத்தரவாதத்துடன் ஜெபி என்று பேசினார்.

### 7 சகோதரி. ஸ்டெல்லா ஜேம்ஸ் - திருப்பூர்

நீலம் மற்றும் பச்சை நிறப் புகையை பார்த்தேன். கேரள மாநிலத்தின் அத்திரப்பள்ளி நீர்வீழ்ச்சி பகுதியில், அநேகர் தண்ணீரில் அடித்துச் செல்லப்படுகிறார்கள். திருவனந்தபுரத்தில் பெரிய மாடி கட்டிடங்கள் இடிந்து விழுகிறதை பார்த்தேன். அதற்குப் பின்னால் கிரியை செய்கிற பெண் ஆவி, சோதோம் கொமோராவின் பாவங்கள் பெருகி இருக்கிறதாக உணர்த்தப்பட்டேன்.

### 8 சகோ. பிரகாஷ் - இராமநாதபுரம்

இன்னும் கொஞ்ச நாட்களில் பொல்லாத மந்திரவாதத்தினாலும், யாகத்தினாலும் பலப்படுத்தப்பட்ட ஆவிகளின் பலத்தினால் இயக்கப்படுகிற மதவாத அமைப்புகள் தேசத்தை சுற்றி வருவார்கள். அவர்களுடைய கிரியைகளின் நிமித்தம் தேசத்திலே கலவரங்களும், இரத்தம் சிந்துதலும் நடக்கப்போகிறது. இதினிமித்தம் தேசத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய காரியங்கள் சம்பவிக்கும். அது சுவிசேஷத்திற்கு தடையை உண்டாகும் என்று உணர்த்தப்பட்டேன்.

### 9 சகோதரி. முத்து மீனா - மதுரை

பச்சிளம் குழந்தைகளின் மாம்சங்கள் பிட்கப்பட்டு, பட்சிக்கப்பட்டு, தெருக்களில் வீசி எறியப்படுவார்கள். இதற்காக இப்பொழுதே ஜெபிக்க வேண்டிய காலமாய் இருக்கிறது என்று கர்த்தர் பேசினார். ஒரு பெண் ஆவி தன் வசீகரத்தினாலும், தன் கையில் வைத்திருக்கிற மதுவினாலும் வாலிபர்களையும், நடுத்தர வயதுடைய ஆண்களையும் இழுத்துக் கொள்கிறாள். அவர்கள் யாவரும் பாவத்தை தண்ணீரைப்போல பருகப் போகிறார்கள். தேசத்தில் பாவம் திரளாய் பெருகும். இதற்காக ஜெபித்து அந்த பொல்லாத ஆவியை துரத்த வேண்டும், இல்லாவிட்டால் அதிக பாவத்தினிமித்தம் கர்த்தரின் கோபம் தேசத்தில் வந்து, அழிவுகள் ஏற்படும் என்பதாக கர்த்தர் வெளிப்படுத்தினார்.

### 10 சகோ. டேனியல் கண்ணன் - சென்னை

பிரகாசமாய் எரிகின்ற அக்கினி பந்தின் கதிர்கள் எனக்குள் ஊடுருவுவதை உணர்ந்தேன். சரீரம் முழுதும் வெப்பமாக இருந்தது. அநேகரின் இரத்தம் சிந்துதலினால் முதலை போன்ற ஒரு மிருகம் எழும்பி, தேசத்தின் தென்கிழக்கு திசை முழுவதிலுமுள்ள விவசாய நிலங்களின் பலனை வாயில் போட்டு விடுகிறது. விளைநிலத்தின் கூலி, மகசூல் உறிஞ்சி குடிக்கப்படுகிறது. பொருளாதார பாதிப்பு, கார்ப்பரேட் தலையிடுதல் போல வெளிப்படுத்தப்பட்டது.

### 11 சகோதரி. அனிட்டா - கன்னியாகுமரி

அநேக விளைநிலங்கள் விதைப்பதற்கு தகுதியில்லாத

நிலங்களாக மாறப்போகிறது. ஜப்பான் தேசத்தில் மிகப்பெரிய அளவில் சுனாமி வரப்போகிறது. பாதா ளத்திலிருந்து ஒரு ஆவி கட்டவிழ்த்து விடப்பட்டு, பல தேசங்களில் சேதங்கள் உண்டாகிறது. புதிய கொள்ளை நோய் அநேக தேசங்களில் வரப்போவ தாக வெளிப்பாடுகளைப் பெற்றேன்.

## 12) சகோதரி. சுஜாதா - கோயம்புத்தூர்

வெள்ளை மற்றும் சிவப்பு நிறத்திலுள்ள நீளமான பெரிய விமானம் தேசங்களின் மீது பறந்து செல்லு கிறது. சர்வாதிகார அதிகாரத்தோடும், பெருமை யோடு கடந்து வருகிறதைப் பார்த்து எல்லா நாடுகளும் பயப்படுகிறது. ஒருவரும் அதை எதிர்த்து நிற்கவில் லை, மாறாக பயந்து அமைதியாக இருக்கிறார்கள். அது நாடுகளை கொள்ளையடித்து, சிறந்த செல்வங்களை வாரிச் செல்கிறது. இளம் வாலிபர்களை கடத்துகிறார் கள். மனிதர்களை கொலை செய்கிறார்கள். உறுப்பு களை கடத்துகிறார்கள். அதை எதிர்த்து நிற்பாரில்லை. அந்த விமானம் கடந்து வருகிற தேசத்தை சர்வநாசம் செய்து கொள்ளையிடுகிறார்கள்.

## 13) சகோதரி. பிரான்சின் சங்கீதா - திண்டுக்கல்

ஒரு கரடி ஆக்ரோஷத்தோடு வருகிறதையும், வானத் தில் மனிதர்களைப் போன்ற உருவங்கள் பறந்து வரு கிறது. பின்பு அது பச்சை நிறத்தில் ஏலியன் (வேற்று கிரகவாசி) போன்று இருந்ததை பார்த்தேன்.

## 14) சகோதரி. கிரீட்டா - இராமநாதபுரம்

தமிழ்நாட்டைக் குறிவைத்து ஜெபித்தேன். திருவண் ணாமலை மாவட்டத்தைக்குறித்து தேவன் பேசினார். மலைகள் குலுக்கப்பட போகிறது, அதற்காக ஜெபிக் கும்படி வெளிப்படுத்தினார்.





## 15) சகோதரி. கிருபா - கோயம்புத்தூர்

தென்னிந்திய மாநிலங்களில் வருகிற வருடங்களில் வரப்போகிற உபத்திரவங்களைக்குறித்து கர்த்தர் வெளிப்படுத்தினார். ஊழியர்கள் சிறையில் வைக்கப் பட்டு, பெண்கள் மற்றும் குழந்தைகள் தெருவில் நிறுத்தப்பட்டு, கொல்லப்படுகிறார்கள். இது தென் மாநில ஊழியர்கள், விசுவாசிகள் மத்தியிலும், கிறிஸ் துவை ஏற்றுக் கொண்டவர்களை மறுதலிக்க வைக்கக் கூடிய கொடிய உபத்திரவமாக காணப்பட்டது. பெண் களைக் குறிவைத்து வரப்போகும் ஆபத்துகளுக்காக ஜெபிக்கும்படி ஏவினார். தென் மாநில கடலோ ரங்களில் அலைகள் எழும்பி, மாநிலங்களின் முக்கிய பட்டணங்கள் பாதிக்கப்படும். சிறு பிள்ளைகளில் பலர் மிருக குணமுள்ளவர்களாய், ஒரு நாய் வெறி கொண்டால் எப்படி காணப்படுமோ அதுபோன்ற சுபாவங்கள் இனி வருகிற வருடங்களில் இந்த மாநி லங்களிலுள்ள பிள்ளைகள் மத்தியில் காணப்படும் என்று உணர்த்தப்பட்டேன்.

## 16) சகோதரி. தீபிகா - பெங்களூர்

மிருகங்கள் மூலமாக மனிதர்களுக்கு தோல் வியாதி கள் வரப்போகிறது. கர்நாடக மாநிலத்தின் வடக்கு திசையில் மனிதர்களுக்கு பேராபத்து வர இருக்கிறது. சில பட்டணங்கள் இல்லாமல் போகும்படி பிசாசு பல திட்டங்களை பண்ணிக் கொண்டிருக்கிறான். யானை

யின் ஆவி வேகமாக ஓடிக் கிரியை செய்கிறது. அரசியல் அதிகாரிகள் மக்களை நம்ப வைத்து அந்த மாநிலத்தை நிலைகுலைய பண்ணப் போகிறார்கள். மழையின் மூலம் பல இயற்கை பேராபத்துகள் வரப் போகிறது. தேசத்திற்காக திறப்பில் ஜெபிக்கிறவர்களை பார்க்கும்படி எதிர்பார்ப்புள்ள ஒரு கண் வைக்கப்பட்டிருப்பதை பார்த்தேன்.

### 17) சகோதரி. சுப்ரிதா - ஈரோடு

தேசத்தில் திரளான மரணங்கள் நிகழும். சிறு பிள்ளைகளின் மரணம் கொள்ளை நோயினால் நிகழும். இதற்குப் பின்புலத்தில் கிரியை செய்யும் ஆவி வட இந்தியாவில் பெண் தெய்வமாக வணங்கப்படுகிறது. எண்ணிக்கைக்கு அடங்காத வாலிப பிள்ளைகளின் மரணங்கள் ஏற்படும். தேசத்தின் தலைவர்கள் தங்கள் சுயலாபத்திற்காக நரபலி கொடுக்கப் போகிறார்கள். கலவரத்தினால் திரளான வாலிபர்களின் மரணங்கள் நிகழும். குடும்பங்கள் திட்டமிடப்பட்டு சிதறடிக்கப்படப் போகிறது. வலுவான மந்திரம் செய்கிறதினால் பல குடும்பங்களில் பிரிவினைகள் வரும். மகா பூமி அதிர்ச்சிகள் உண்டாகப் போகிறது. வட இந்தியா தொடங்கி மத்திய இந்தியாவின் பாதி வரை திட்டமிட்டு நடத்தப்படப் போகிறது. பலரின் வாழ்வாதாரங்கள் அழியும். திட்டமிட்டு அவர்களை வீதிகளில் தள்ளப் போகிறார்கள். அரசியலில் திட்டமிடப்பட்ட பெரிய மாற்றம் உண்டாகும்.

### 18) சகோதரி. நீலாவதி - இராமநாதபுரம்

இரண்டு மூன்று நிமிடங்கள் திடீரென்று நினைவு இழந்து கடற்கரை பகுதியில் நிற்பதாக உணர்ந்தேன். பீகார் மாநிலத்தில் பல தீமைகள் ஏற்படும். கூர்மையான நகங்களுள்ள கரிய நிற பெரிய வண்டை பார்த்தேன்.

### 19) சகோ. அன்டனி லினட் ராஜா - சென்னை

மதுபானக்கடைகள் மூலமாக திரளான மரணங்கள் உண்டாகும், அது தடுக்கப்படும்படி ஜெபிக்க கர்த்தர் ஏவினார். தென்மாநிலங்களில் போடப்பட்ட எழுப்புதல் அக்கினி அணைந்து போய், அது பரவாதபடி சாத்தான் வட இந்தியாவில் திரளான பாதிப்புகளை ஏற்படுத்துவான். வேலை இழப்புகள் அதிகமாகி பொருளாதார பாதிப்பும், தற்கொலைகள் பெருகும். இதற்காக ஜெபிக்கும்படி கர்த்தர் ஏவினார்.

### 20) சகோதரி. மீனா - ஆந்திரா

தேசத்தின் மேல் கொள்ளை நோய் வரும் என்பதாக என் ஆவியில் உணர்த்தப்பட்டேன்.

### 21) சகோதரி. குளோரி பிரிசில்லா - ஈரோடு

ஒரு பெரிய கை மண்ணை இந்தியாவின் மேல் தூவியது. ‘சாபக்கேடு‘ என்ற வார்த்தை சொல்லப்பட்டது. அந்த மண் துகள்கள் நூற்றுக்கணக்கான விரியன் பாம்புகுட்டிகளாய் மாறி தேசத்தின் எல்லா மாநிலங்களுக்குள்ளும் நுழைந்தது. அதன் மூலம் பல மலைப் பிரதேசத்தில் நிலச்சரிவுகளும் மரணங்களும் ஏற்படும். காரணமில்லாதவைகள் பெரிய பிரச்சனையாக மாற்றப்பட்டு கலவரங்கள் தேசத்தின் பல பகுதிகளில் வெடிக்கும். இதுவரை கண்டிராத அளவிற்கு வெயிலின் கொடுமை அதிகமாகி ஜனங்கள் சடுதியில் மரணமடைவார்கள். வெட்டுகிளிகள் திரளாய் புறப்பட்டு நிலத்தின் பலனை தின்று போட்டது. தேசத்தின் நன்மை தேசத்தாருக்கு கிடைக்காது. பிற தேசத்திற்கும் ஏற்றுமதி செய்ய முடியாது. சபைகள் மேல் சிவப்பு துணி போர்த்தப்பட்டிருந்தது. தேசத்தில் மரணங்கள் நடப்பதை கண்டு உணராமல், ஜெபிக்க மனமில்லாமல் சபையார் இருப்பார்கள். இதன் பின்னால் வானராக்கினி கிரியை செய்கிறது. தேசத்திற்கு விரோதமான முடிவுகளை எடுக்கும் ஆட்சியாளர்களை சிங்காசனத்தில் உட்கார வைக்கவும், கள்ளத்தனமாய் சாவிகளை அவர்கள் கரத்தில் கொடுத்து, தீமைக்கு கதவுகளை திறக்க ஆவி கிரியை செய்கிறது. திரளான பல்லிகள் குழந்தைகள் தலையின்மேல் ஏறும் போது மரிக்கிறார்கள்.

### 22) சகோதரி. அன்னக்கிளி - இராமநாதபுரம்

இந்திய தேசத்தில் மருத்துவத்துறையில் போலியான மருத்துவர்களால் பல உயிர்கள் பறிபோவதை காட்சியாக கண்டேன். காடுகளில் குரங்கு போன்ற விலங்குகளால் ஆபத்து ஏற்படும். பாறை இடுக்குகளில் கறுமையான உருவத்துடன் விகாரமான உருவம் பெண்களைக் குறி வைத்து தாக்குவதைக் கண்டேன். விலங்குகள் குழந்தைகளை குறிவைத்து தாக்குகிறது.

### 23) சகோதரி. ஆனந்தி - சென்னை

இந்திய தேசத்தின் கீழ் காணப்படும் தீவுகளில் ஒன்று கடலின் அலைகளினால் மூடப்பட்டது. அநேக மனிதர்கள் செத்து மிதக்கிறதையும், முதலையின் வாயில் அநேக மனித தலைகளையும் தரிசனமாக பார்த்தேன்.

### 24) சகோ. பேட்ரிக் ஜோயல் - சென்னை

ஒரு வரைபடம் தோன்றியது. இந்திய தேசத்தின் எல்லா பகுதிகளில் இருந்தும் டெல்லியை நோக்கி செல்லும் விமானங்கள், ரயில்களில் விபத்துக்கள் அல்லது குண்டுவெடிப்புகள் மூலம் பல லட்சம் ஆத்துமாக்கள் மரிக்கப் போவதாக வெளிப்படுத்தப்பட்டேன்.

# கனியுள்ள ஜீவியம்



சகோதரி ஏஞ்சலின் ஜோனத்தான்

*அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலை யுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்.* சங்கீதம் 1:3

கர்த்தருக்குள் நம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் தேவன் தரும் ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் பற்றியும், அவருக்குள் நாம் வேர் பற்றினால், நம் வாழ்க்கை எத்தனை பாக்கியமுள்ளதாய் இருக்கும் என்பதை அறிய முடியும்.

ஒரு மரத்தை நடும்போது, அதில் கனிகள் வர வேண்டுமென்கின்ற நோக்கத்தில் தான் வைப்போம். அது போல, கர்த்தரும் நம்மிடத்தில் பெரிய எதிர்பார்ப்பை வைத்திருக்கிறார். நம்மைத் தெரிந்து கொண்டு, பாவத்திலிருந்து மீட்டு, புதிய வாழ்வை கொடுத்து, நாம் ஏற்ற காலத்தில் தேவன் விரும்புகிற நிறைவான கனிகளைத் தர வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

## எப்போது கனிகள் உண்டாகும்?

**1. கர்த்தருக்குள் வேர் பற்றியிருந்தால்.**

*யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே வேர் பற்றி மேலே கனி கொடுப்பார்கள்.* ஏசாயா 37:31

வேர் பற்றினால் தான் நம் வாழ்வில் கனிகள் உண்டாகும். வேர் என்பது வெளியே கண்ணுக்குத் தெரியாமல், மண்ணுக்கு அடியில் நடக்கிற காரியம். கனி கொடுப்பது என்பது அனைவரும் பார்க்கும்படி வெளியே தெரியும். அதுபோல, நாம் சரியானபடி கர்த்தருக்குள் வேர் பற்றியிருந்தால், மிகுந்த கனிகளை வெளியரங்கமாய் கொடுப்போம். யாருக்கும் தெரியாமல் அந்தரங்கத்தில் அதாவது, நம் உள்ளான வாழ்வில் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக வேர் பற்றியிருந்தால், அவரிடத்திலிருந்து வருகிற பலம் நம் ஆத்துமாவை செழிப்புள்ளதாகவும் பலமுள்ளதாகவும் மாற்றி, மிகுந்த கனிகளை கொடுக்கும்படி செய்யும். அப்போது அநேகருக்கு பிரயோஜனமுள்ளவர்களாகி, கர்த்தரை பிரதிபலித்துக் காட்டுவோம்.

நாம் செய்கிற ஜெபங்கள் தேவனால் செவிகொடுக்கப்பட்டது என்றால் கனிகள் நிறைந்த ஜீவியம் செய்கிறோம் என்று அர்த்தம். பதிலளிக்கப்பட்ட ஜெபங்கள் என்பது கனிகள் தான்.

## வேர் பற்றுதல் என்றால் என்ன?

**1. கர்த்தருக்குள் நிலைத்திருத்தல்.**

*நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்..* யோவான் 15:1-8

நமக்குள்ளே கர்த்தரும், அவருக்குள்ளாக நாமும் நிலைத்திருந்தால் தான் வேர் பற்ற முடியும். அப்போதே நம் வாழ்க்கை ஆசீர்வாதமாகவும், கனியுள்ள ஜீவியத்தை உடையதாகவும் இருக்கும். வசனத்தின்படி வாழ்வதும், வசனத்தின்படி வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்வதும், வசனங்களை இருதயத்தின் ஆழத்தில் பத்திரப்படுத்தி வைப்பதும் தான் ஏற்ற கனிகளை கொடுக்க உதவும். ஏசாயா 37:30 ,31 வசனங்களில் மூன்று நிலைகள் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

- தப்பிப் பயிராகிறதை சாப்பிடுவது
- தானாய் விளைந்ததை புசித்தல்
- விதைத்து, அறுத்து வேலை செய்து கனிகளைப் புசிப்பது

முதல் இரண்டு நிலைகளில் நாம் எதுவும் செய்யத் தேவையில்லை, கர்த்தரே போஷிக்கிறார். ஆனால் மூன்றாம் நிலை வரும் போதோ நாம் தான் விதைத்து, அறுத்து, தோட்டங்களை நாட்டி, வேலை செய்து புசிக்க வேண்டுமென்பதை சொல்லிக் கொடுக்கிறார். நம் உழைப்பைக் கொடுக்கும்போது, கர்த்தர் நம் பிரயாசங்களை ஆசீர்வதிக்கிறார்.

அதுபோல தான் நம் வாழ்க்கையும் ஊழியமும் இருக்கிறது. இரட்சிக்கப்பட்ட புதிதில் எல்லாவற்றையும் கர்த்தரே நமக்காக செய்தார். சகல காரியத்திற்கும் கர்த்தரையே சார்ந்து இருந்தோம். அதுபோல எப்போதுமே இருக்க முடியாது. காலங்கள் ஓடும்போது நம் ஆவிக்குரிய வளர்ச்சி பெருகி, கர்த்தருக்குள் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். என்னைக்குறித்த உமது சித்தம் என்ன, அதன்படி செய்ய விரும்புகிறேன் என்று தேவனிடம் கேட்கும்போது, நம் சகல பிரயாசங்களையும் தேவன் பார்த்து ஆசீர்வதிப்பார். அப்போதே மிகுந்த கனிகளைக் கொடுத்து, மற்றவர்களுக்கும் பிரயோஜனப்பட முடியும்.

**2. தண்ணீரண்டை நாட்டப்பட்டு, வேர்களை விடுதல்.**

*7. கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.*

*8. அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான்.* எரேமியா 17:7,8

தண்ணீரண்டை நாட்டப்படுகிறதும் வேர்களை விடுகிறது என்பது கர்த்தருக்குள் நாமும், நமக்குள் கர்த்தரும் நிலைத்து வேரூன்றி இருக்கிறதைக் குறிக்கிறது. அப்போது உஷ்ண காலமாயிருந்தாலும், மழைத் தாழ்ச்சியாக இருந்தாலும், எந்த சூழ்நிலையாக இருந்தாலும் வருத்தமின்றி தப்பாமல் கனி தர முடியும் என்பது தேவன் கொடுக்கிற வாக்குத்தத்தம்.

## யார் கனி கொடுக்க முடியாது?

**1. வெட்டுண்டு போனவர்கள் :**

*எப்பிராயீமர் வெட்டுண்டு போனார்கள்; அவர்கள் வேர் உலர்ந்து போயிற்று, கனி கொடுக்கமாட்டார்கள்.* ஓசியா 9 : 16

வெட்டுண்டு போனவர்கள் என்றால் கர்த்தருக்குள் நிலைத்து நிற்காதவர்கள். அப்படிப்பட்டவர்களால் கனி கொடுக்க முடியாது. இயேசுகிறிஸ்துவுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் போது, பாதி வழியில் பாவத்தினிமித்தம் கர்த்தரைவிட்டு பின்வாங்கினால் நம்மால் கனி கொடுக்க முடியாது. காரணம், வேர் உலர்ந்து போய்விடும். ஒரு மரத்திற்கு மிக முக்கியமானது வேர்தான். வேர் சரியாக இருந்தால் தான் மிகுந்த கனிகளைக் கொடுக்க முடியும். நம் வேர்கள் கர்த்தருக்குள் சரியாய் நாட்டப்பட்டிருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியம்.

**2. விதையற்றவர்கள் :**

*களஞ்சியத்தில் இன்னும் விதைத்தானியம் உண்டோ? கனிகொடுக்கவில்லையே;* ஆகாய் 2 : 19

களஞ்சியம் என்பதை நம் இருதயத்திற்கும், நாம் செய்கிற ஊழியங்களுக்கும், விதை தானியம் என்பதை தேவனுடைய வார்த்தைக்கும் ஒப்பிடலாம். நம்முடைய இருதயமாகிய களஞ்சியம் வசனமாகிய தானியத்தால் எப்போதும் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். அப்போதே மிகுந்த கனிகளைக் கொடுக்க முடியும்.

## எதில் கவனமாய் இருக்க வேண்டும்?

**1. கனிகளை பட்சிப்பவைகள்மேல் கவனம் :**

*பூமியின் கனியைப் பட்சித்துப் போடுகிறவைகள் உங்கள் நிமித்தம் கண்டிப்பேன்.* மல் 3:11

பொதுவாக, கனிகள் வரமுடியாதபடி பட்சிக்கிற காரியங்களாக பூச்சிகள், புழுக்கள், நோய்கள் இருக்கும். இதினிமித்தம் கனிகள் நிறைவாகாமல் போய்விடலாம். அதுபோல, நம் வாழ்க்கை அல்லது செய்கிற ஊழியங்கள் கனி கொடுக்க முடியாதபடி கர்த்தர் விரும்பாத சில காரியங்கள், வெறுக்கிற பாவங்கள் நமக்குள் மறைந்திருக்கிறதா என்று கவனித்து பார்க்க வேண்டும்.

### 2. வேர்கள்மேல் கவனம் :

> ***அன்றியும் பெரிய செட்டைகளையும் திரளான இறகுகளையும் உடைய வேறொரு பெரிய கழுகு இருந்தது; இதோ, அது தன் நடவாகிய பாத்திகளிலிருந்து திராட்ச்செடி அதற்கு நேராகத் தன் வேர்களை விட்டு, அதற்கு நேராகத் தன் கொடிகளை வீசியது.*** எசே 17:7-10

இந்த வசனங்கள் நம் வேர்கள் எங்கேயிருக்கிறது என்பதை கவனித்துப் பாருங்கள் என்று எச்சரித்துச் சொல்லுகிறது. இஸ்ரவேல் ஜனங்களுக்கு மிக அழகாக ஒரு உவமை இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. கழுகு ஒரு விதையை எடுத்துக் கொண்டு போய் மிகுந்த தண்ணீருள்ள இடத்தின் ஓரத்தில் பத்திரமாக நட்டது. அது திராட்சைச்செடியாகி தன் வேர்களை விட்டு, கிளைகளை வீசி, கொப்புகளை விட்டது. இதுவரைக்கும் சரி. ஆனால் 7ம் வசனத்தில் மற்றொரு கழுகைப் பற்றிச் சொல்லப்பட்டிருப்பதை கவனியுங்கள்.

தண்ணீர் பாய்ச்சும்படி அதற்கு நேராக வேர்களை விட்டு, கொடிகளை வீசினது என்று எழுதப்பட்டிருக்கிறது. அப்படியானால், எங்கே கனி கொடுக்க வேண்டுமோ அங்கே இல்லாமல் மற்றொரு கழுகு இருக்கிற பாத்தியிலே போய் வேர் பற்றினது. கர்த்தர் கேட்கிறார், இந்த மரம் பட்டுப் போகாமலிருக்குமா? மிகுந்த கனிகளைக் கொடுக்குமா? என்று. ஒரு மரத்துக்கு மிக முக்கியமானது வேர் தான். அந்த வேர் கர்த்தருக்குள் இருந்தால் மட்டுமே மிகுந்த கனிகளைக் கொடுக்க முடியும். உலக காரியங்களிலோ, கர்த்தர் வெறுக்கிற காரியங்களிலோ நம் வேர்கள் இருக்கிறதா? என்று ஆராய்ந்து பாருங்கள்.

> ***என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப் போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிகக் கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்.*** யோ 15: 2

வெட்டுகிறதில் இரண்டு விதங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அறுத்துப் போடும்படி வெட்டப்படுவது, சுத்தம் செய்வதற்காக வெட்டப்படுவது. வெட்டப்படுவது அவசியம் தான். ஆனால் எதற்காக என்பதில் தான் கவனமாயிருக்க வேண்டும்.

தேவன் எதிர்பார்க்கிற மிகுந்த கனிகள் நம் வாழ்வில் இருக்கிறதா என்று பாருங்கள். கனிகள் இல்லாவிட்டால் கர்த்தருக்குள் இன்னும் வேர் பற்றவில்லை என்றுதான் அர்த்தம். வேத வசனங்களால் நம் வாழ்வும், செய்யும் ஊழியங்களும் நிறைந்திருந்தால் எல்லா காலங்களிலும் வருத்தமின்றி தப்பாமல் கனி கொடுக்கிறவர்களாக இருப்போம் என்பது தேவன் தரும் வாக்குத்தத்தம்.




தமிழில் வேதாகமத்தை மொழிபெயர்த்தவர் சீகன் பால்கு என்பவராவார். ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த இவர் கி.பி. 1705-ம் ஆண்டில் தஞ்சைக்கு அருகில் உள்ள தரங்கம்பாடிக்கு வந்தார். அதன் பின்பு 1708-ம் ஆண்டு புதிய ஏற்பாட்டை மொழிபெயர்க்கத் துவங்கி 1711-ம் ஆண்டில் இந்த பணியை முடித்தார். இதன் பிரதிகள் இன்றளவும் வத்திகான் நூலகத்தில் இருக்கிறது. இதன் பின்பு பழைய ஏற்பாட்டையும் மொழிபெயர்க்கத் துவங்கினார். அதனை முடிப்பதற்குள் 1719-ம் ஆண்டில் அவர் காலமாகிவிடவே அவர் விட்டுச் சென்ற பணியை அவரது நண்பர் பெஞ்சமின் ஸ்கல்ஸ் மொழிபெயர்த்தார். இந்த முழு வேதாகமம் 1728-ல் வெளியிடப்பட்டது.

**துணுக்குச் செய்திகள்**



# வாலிபர்கள் மேல் வரும் ஆபத்துகள்

## ஜெபிக்கலாம் வாங்க

வாலிபர்கள் நினைத்தால் எப்படிப்பட்ட மாற்றங்களையும் தேசத்தில் கொண்டு வந்துவிட முடியும். அந்தளவிற்கு பராக்கிரமம் நிறைந்தவர்கள். வேதத்தில் தாவீது முதல் யோ சேப்பு, தானியேல் போன்ற பலர் அரசாங்கமே எதிர்த்தாலும் கொஞ்சமும் பின்வாங்காமல் கர்த்தருக்கென்று வைராக்கியமாக நின்றவர்கள்.

இந்தக் கடைசி நாட்களில் வைராக்கியமும் பலமும் தைரியமும் நிறைந்த வாலிப சேனை எழும்ப வேண்டும் என்பது தேவ திட்டம், திரை மறைவில் சாத்தான் செய்கிற சகல தந்திரங்களையும், எழுப்புதலுக்கு விரோதமாக வருகிற தடைகளையும் அழித்துப் போடும் உன்னதமான திட்டங்களும், பங்கும் வாலிபர்களுக்கு உண்டு, மட்டுமல்ல, வாலிபர்களுக்கே உரிய விசேஷித்த அபிஷேகத்தை, வாக்குத்தத்தங்களை தேவன் வைத்திருக்கிறார்.

1 யோவான் 2:13ல், வாலிபரே, பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினால் உங்களுக்கு எழுதுகிறேன். சாத்தானை நேருக்கு நேர் போராடி ஜெயிக்கிற ஒரு யுத்த சேனை. யோவேல் 2:28ல், கடைசிக்கால அபிஷேகத்தில் வாலிபர்கள் மேல் வரும், தரிசனங்களைப் பார்ப்பார்கள், கடைசிக்கால வாலிபர்கள் பலவான் கையிலுள்ள பராக்கிரமமுள்ள அம்புகளைப்போல வல்லமையானவர்கள். அவர்களைக் கொண்டுதான் எழுப்புதலுக்கு அஸ்திபாரம் போடவும், பாதைகள் செவ்வைப்பண்ணவும், தடைகளை ஜெயித்து எழுப்புதலைக் கொண்டு வரவும், அதை தேசங்களுக்குள் பரவச் செய்வதுமான முக்கியமான பணிகள் நியமிக்கப்பட்டிருக்கிறது.

உலகத்தின் அதிபதியான சாத்தானை எதிர்த்து யுத்தம் பண்ணவும், இருளின் ஆதிக்கத்தில் அவன் செய்கிற மறைவான தந்திரங்களை கண்டறிந்து, அவனுக்கெதிராக பட்டயங்களை உருவுகிற கடைசிக் கால யுத்த தலைமுறையாக வாலிபர்கள் தேவ கரங்களில் பயன்படுத்தப்பட போகிறார்கள்.

இந்த ராஜரீக பணியில் வாலிபர்கள் பலவான்களாய் எழும்பி விடக்கூடாதென்று சாத்தான் பல வழிகளில் கிரியை செய்து வாலிபர்களை அடிமைப்படுத்தி கட்டி வைத்திருக்கிறான். இரவு பகல் தெரியாமல் பல மணி நேரங்கள் ஆன்லைன் கேம்ஸ், வீடியோஸ் என இன்டர்நெட்டுக்கு முன் எல்லாவற்றையும் மறந்து உட்கார்ந்து நேரங்களை விரயம் செய்கிறார்கள். இது தான் சாத்தானின் தந்திரம். நேரத்தை திருடுவது. நேரம் இருந்தால் அவர்களின் ஓட்டம் துவங்கிவிடும், சாத்தானுக்கு எதிராய் கிரியை செய்ய ஆரம்பித்துவிடுவார்கள் என்பதை அறிந்து சாத்தான் நேரங்களை திருடி, கண்களை குருடாக்கி உணர்வற்றவர்களாய் கட்டி வைத்திருக்கிறான். கண் சொருகிப்போன, மந்தமான வாலிபர்கள் கர்த்தருக்கென்று வைராக்கியமான காரியங்களைச் சாதிக்க முடியாது. இப்படி வாலிபர்களை அடிமைப்படுத்தி எதற்கும் பிரயோஜனமில்லாதவர்களாய் சாத்தான் மாற்றிக் கொண்டே வருவது நம் தேசத்திற்கும், நம் வாலிப தலைமுறைக்கும் மிகவும் ஆபத்து. அசுத்தத்திலும், உலகத்திலும் அடிமைப்பட்டிருந்தால் தேவன் அவர்களை எடுத்துப் பயன்படுத்த முடியாது. பரிசுத்தமான, வேறு பிரிக்கப்பட்ட வாலிபர்களைத்தான் ராஜ்ஜியத்தின் பணிகளில் பயன்படுத்த முடியும். இதனால் தான் சாத்தான் பலமாய் கிரியை செய்து கொண்டு வருகிறான். இதைப் பார்க்கிற தேவ ஜனங்களாகிய நாம் சாத்தானின் செயல்களைக் கட்டி வைராக்கியமாக யுத்தம் செய்து ஜெபிக்கலாம் வாங்க.!

1. பாவ இச்சைகளுக்கு அடிமைப்பட்டு நேரங்களை விரயம்பண்ணி கொண்டிருக்கிற வாலிபர்கள் விடுவிக்கப்பட, தங்களைக்குறித்த தேவ சித்தத்தை அறியும் உணர்வுள்ள இருதயத்தை பெற, உலகின் பிடியில் சிக்கிக் கொள்ளாமல் வாலிபர்களின் ஆத்துமாக்கள் காக்கப்பட, தேவனுக்கென்று பயன்பட ஜெபிப்போம்.

2. வாலிபர்களைக்குறித்த தேவ திட்டத்தை தடைசெய்யும் சாத்தானின் தந்திரங்கள் முறியடிக்கப்பட, யுத்த சேனையாக வைராக்கியமாய் எழும்பிட, சாத்தானின் மறைவிடத் திட்டங்களை அழித்து தேவ ராஜ்யத்தை பூமியில் ஸ்தாபிக்கும் ராஜரீக பணியில் நம் வாலிபர்கள் பயன்படுத்தப்பட ஜெபிப்போம்.

இயேசுவின் தொனி ஊழியங்களின்

ஒரு புதிய YOUTUBE சேனல்

# THE FINAL ALERT

(தி ஃபைனல் அலெர்ட்)

Click
www.youtube.com@thefinalalert

திங்கள்




வெள்ளி




செவ்வாய்




வியாழன்




சனி




புதன்




ஞாயிறு




**தினமும் இரவு 9 PM**

கடைசிக்காலத்தில் தேவனை சந்திக்கும்படி நம்மை ஆயத்தப்படுத்துவதற்கேற்ற செய்திகளும், இன்னும் பல கலந்துரையாடல்களும் இடம்பெறுகின்றன.. காணத்தவறாதீர்கள்.. பிறருக்கும் அறிமுகப்படுத்துங்கள்...

## இயேசுவின் தொனியின் இலக்கிய வெளியீடுகள்




## காணிக்கை செலுத்த விரும்புவோர் கவனத்திற்கு...

**VINCENT SELVAKUMAR**
**A/C NO. 910010022737183**
**VOICE OF JESUS MINISTRIES**
**A/C NO. 910010023338787**

**BANK DETAILS**

**AXIS BANK, RAMNAD BRANCH**
**IFS CODE : UTIB 0001080**
**SWIFT CODE : AXIS IN BB 109**

## CALL US FOR MORE INFO

(+91) 9788 404 333
(+91) 9731 722 977

CLICK HERE